# 3 தவ்ஹீதின் வகைகள்

அல்லாஹ் அவனுக்கென சொந்தமாக்கிக் கொண்ட ருபூபிய்யத், உலூஹிய்யத், அவனது பெயர்கள் பண்புகள் ஆகியவற்றில் அவனே தனித்தவன் அவனுக்கு நிகரில்லை என நம்புவது.

அது மூன்று வகைப்படும்

### தவ்ஹீத் அல் அஸ்மாஃ ,வஸ் .ஸிஃபாத்

அல்லாஹ் தனக்கென குர்ஆனில் குறிப்பிட்ட பெயர்கள், பண்புகள் மற்றும் அவன் தூதர் வழியாகவும் குறிப்பிட்ட பெயர்கள் பண்புகளில் அல்லாஹ்வை ஒருமைப்படுத்தல். அதாவது அவன் தனக்கென்று குறிப்பிட்ட பெயர்கள் பண்புகளை அவனுக்கு உண்டென்றும். இல்லை என மறுத்தவற்றை இல்லை என்றும் எவ்வித திரிவுபடுத்தலோ, நிராகரிப்போ, எப்படி என்றோ அல்லது உதாரணம் கற்பித்தோ கூறாது அவற்றில் அவனே தனித்துவமானவன் என நம்புதல்.

### தவ்ஹீத் அல் உலூஹிய்யாஃ

அல்லாஹ்வுக்கு மாத்திரம் வணக்கத்தை செலுத்துவது, அல்லது அடியார்கள் தங்கள் செயல்களால் அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவது.

### தவ்ஹீத் அல் ருபூபிய்யாஃ

அல்லாஹ்வின் செயல்களுக்கு நிகராக யாரும் இல்லை, அவன் தனித்தவன், அவனே படைப்பு, ஆட்சி, நிர்வாகம் ஆகியவற்றிற்கு சொந்தமானவன் என நம்பி செயற்படல்.

# சன்மார்க்க படித்தரங்கள் மூன்று

### இஹ்ஸான்

அல்லாஹ்வை நேரில் பார்ப்பது போன்று வணங்குவது, அவ்வாறு பார்க்காவிடினும் அவன் பார்க்கிறான் என்றுணர்ந்து வணங்குவது.

இவ்விடயத்தில் இரண்டு படித்தரங்கள் உள்ளன.
ஒன்று: நேரடிப்பார்வையுடைய வணக்கம். அதுவே அல்லாஹ்வை நீ காண்பது போன்று வணங்குவது.
இரண்டு: அல்லாஹ் உற்று நோக்குகிறான் என்றுணர்ந்து வணங்குவது.
அதுவே நீ அவனை காணாவிட்டாலும் அவன் உன்னை காண்கிறான் என்று சொல்லப்படுவது

### ஈமான்

நாவினால் மொழிந்து, உள்ளத்தால் ஏற்று, உறுப்புக்களால் செயல்படுத்துவது. மேலும் அது கூடும் குறையும் என நம்புவது.

**ஈமானின் தூண்கள்: 6**

1. அல்லாஹ்வை நம்புவது
2. வானவர்களை நம்புவது
3. வேதங்களை நம்புவது
4. ரசூல்மார்களை நம்புவது
5. இறுதி நாளை நம்புவது
6. விதி ஏற்பாடு அதனால் ஏற்படும் நன்மை தீமை யாவும் அல்லாஹ்வின் ஏற்பாடு என நம்புவது.

### இஸ்லாம்

அது அல்லாஹ்வை ஒருமைப்படுத்தி அவன் முன் சரணடைந்து, அவனுக்கு கீழ்படிந்து. இணைவைப்பு அது சார்ந்தவற்றை விட்டும் விலகி இருப்பது.

**இஸ்லாத்தின் தூண்கள்: 5**

1. கலிமா,
2. தொழுகை,
3. நோன்பு,
4. சக்காத்
5. ஹஜ்.

# 4 ஹராமானவற்றின் வகைகள் நான்கு

### சிறிய பாவங்கள்

இது பெரும் பாவங்களுக்கு அடுத்து வரும் பாவங்கள். நாம் செய்யும் இஸ்திஃபார் மூலம் இவை மன்னிக்கப்பட்டுவிடும். சிறிய பாவங்கள் அதைத் தொடர்ந்து செய்வதால் பெரும்பாவங்களாக மாறிவிடும். நபி (ஸல்) கூறினார்கள்: உங்களுக்கு நான் சாதாரண அற்பமான பாவங்களை எச்சரிக்கிறேன். ஏனெனில் அவை அனைத்தும் ஒன்றாக இணைந்து ஒரு மனிதனை நாசமாக்கிவிடும்.

### பெரும் பாவங்கள்

இவை குறித்த ஒரு தண்டனை அதற்குண்டென சொல்லப்பட்ட பாவங்கள். உதாரணமாக சூனியம், பெற்றோர்களை அவமதித்தல், வட்டி, விபச்சாரம், ஓரினச்சேர்க்கை, மது அருந்துதல், திருட்டு, புறம், அப்பாவி உயிர்களை கொல்வது, யதீம்களின் சொத்தை அபகரிப்பது.

### சிறிய இணை வைப்பு

இது பெரும் பாவங்களில் ஒன்று. இருப்பினும் மார்க்கத்தை விட்டும் ஒருவரை வெளியேற்றி விடாது. உதாரணமாக: அல்லாஹ் நாடியதும் நீங்கள் நாடியதும் என்று சொல்வது. அல்லாஹ் அல்லாதவற்றை வைத்து சத்தியம் செய்வது. சாதாரண முகஸ்துதி ஏற்படுவது, இணைவைப்பு சார்ந்த தாயத்துகளை அணிவது, கெட்ட சகுனம் பார்ப்பது, வளையல்கள், மணிகோர்வைகளை பாதுகாப்புக்காக அல்லது கண் திருஷ்டியிலிருந்து பாதுகாப்பு பெற கைகளில் கட்டிக் கொள்வது.

### பெரிய இணை வைப்பு

இது இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றிவிடும், அதே நிலையில் மரணித்தால் மன்னிப்புக் கிடைக்காது. அதாவது அல்லாஹ்வுக்கு நிகராக ஒன்றை ஏற்படுத்தி அல்லாஹ்வை பயப்படுவது போன்று பயப்படுவது, பிரார்த்திப்பது, அல்லது அவர்கள் ஆதரவை ,அருளை எதிர்பார்ப்பது, மேலும் அல்லாஹ்வைப் போன்று அவர்களையும் நேசிப்பது, அல்லது இபாதத்துக்களில் ஏதாவது ஒன்றை அவர்களுக்கு நிறைவேற்றுவது